# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

**THIRD EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2011/2012**

HELD IN NOVEMBER/DECEMBER – 2013

## PSC 3.21 Issues in Politics in Sri Lanka

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

1. "இலங்கை எதிர்நோக்கும் அநேகமான அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணம் பொருளாதாரக் குறைவிருத்தியும் அரசியல் நவீனமயமாக்கமின்மையுமாகும்." ஆராய்க.

   (20 புள்ளிகள்)

2. இலங்கையின் இனமுரண்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்த அரசியல் காரணிகளின் வளர்ச்சிப் போக்கினையும் அதன் விளைவுகளையும் பரிசீலிக்குக.

   (20 புள்ளிகள்)

3. (i) இலங்கை அரசியலில் பெண்களின் பங்கேற்பு குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாவை?

   (ii) பெண்களின் அரசியல் பங்குபற்றுவதனை ஊக்குவிப்பதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் யாவை?

   (20 புள்ளிகள்)

4. "இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் ஒரு பிரதான பண்பு சனநாயக வழிமுறையினூடாக சனநாயகமல்லாத ஒரு பலம்வாய்ந்த அரசியல் நிறுவனத்தை தாபித்துள்ளமையாகும்." 1978 அரசியலமைப்பின் கீழுள்ள நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியோடு தொடர்புபடுத்தி இக்கூற்றை ஆராய்க.

   (20 புள்ளிகள்)

5. அரசியல் வன்முறை என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? இலங்கை வன்முறையின் இயல்பினையும் பாங்கினையும் நீர் எவ்வாறு விளக்குவீர்?

   (20 புள்ளிகள்)

6. “அரசியலமைப்பினில் உள்ளடக்கப்படுவதன் மூலம் மட்டும் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்க முடியாது.” இக்கூற்றை 1978 அரசியலமைப்பின் கீழ் அமைந்த சட்ட விதிகள், அவற்றின் அமுலாக்கம் என்பவற்றுக்குப் பூரண கவனம் செலுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. இலங்கை அரசியலில் மதம் வகிக்கும் பங்கும், அதன் தாக்கங்களையும் நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு (02)** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கையின் தற்போதய வெளியுறவுக் கொள்கையின் போக்கு
(ஆ) இலங்கையின் அரசாங்க சேவை அரசியல்மயப்படுத்தப்படுதல்
(இ) இலங்கையில் ஊடகச் சுதந்திரம்
(ஈ) மாகாண சபைகளின் மீதான மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள்

(2X10=20 புள்ளிகள்)